**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால் வழங்கப்பட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

### 2.1.1 வருமான மதிப்பீடு தயாரித்தலின் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

2015 ஜுன் 22 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வு கூறல் மற்றும் மதிப்பீடுகளை உரிய முறைப்படி தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------- | ------------------------ | ------------------- |
| **(அ) வருமானக் குறியீட்டிலக்கம் 20:02:03:00 - இலாபம்** | | |
| (i) 20:02:03:00 இலாப வருமானக் குறியீடின் பொருட்டு 2022 ஆண்டிற்காக ரூபா 34,700,000,000 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த உள்ளவாறான வருமானம் ரூபா 22,004,727,426 அல்லது 63 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. | நாட்டினுள் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் முன் நிலையிலும் 2022 ஆண்டிற்காக வருமான குறியீட்டிலக்கம் 20.02.03.00 இன் கீழ் மதிப்பிடப்பட்டிருந்த வருமானத்திலிருந்து 63 சதவீத வருமான அளவொன்றை சேகரிக்க பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு முடியுமாக இருந்தது. | வருமானத்தை சேகரித்துக் கொள்ள காணப்படும் நிறுவனங்கள் பற்றிய சரியான எதிர்வு கூரல்களை செய்து மிகவும் சரியாக வருமான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். |
| (ii) இந்த வருமான குறியீட்டிலக்கத்திற்கு உரியதாக 9 நிறுவனங்களில் வருமான மதிப்பீட்டிற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானத்தின் குறைவு 3 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைலான வீச்சளவில் காணப்பட்டது. | வருமான மதிப்பீடுகளிற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானத்தில் குறைவிற்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூறல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |
| (iii) | 2022 ஆண்டில் 09 பொது முயற்சிகள் ஊடாக ரூபா 10,160 மில்லியன் வருமானத்தை ஈட்டுவதற்கு மதிப்பிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த முயற்சிகளிலிருந்து எவ்வித வருமானமும் சேகரிக்கப்பட்டு இருக்க வில்லை. | 2022 ஆண்டில் எவ்வித வருமானமும் சேகரிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்த 09 பொது முயற்சிகள் தொடர்பாக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூறல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |
| (iv) | மீளாய்வாண்டில் 03 பொது முயற்சிகளிலிருந்து இலாப வருமானம் மதிப்பிட்டிருக்காத போதிலும், அந்த முயற்சிகளில் இருந்து ரூபா 1,049.9 மில்லியனான இலாப வருமானம் பெறப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டினுள் உச்சமாக நிலவிய அரசின் மூலதன பிரச்சினைகள் காரணமாக இந்த நிறுவனங்களில் இருந்து மதிப்பீடு செய்யப்படாத போதும், இலாபத்தை, பொது திறைசேரிற்கு அனுப்புதல்கள் மேற்கொள்ளப்பட்டன. | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூறல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டியமை. |
| (v) | 05 பொது முயற்சிகளிலிருந்து இலாப வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த முயற்சிகளினால் மதிப்பிடப்பட்ட இலாப வருமானத்தை விட கூடுதலாக 75 சதவீதம் முதல் 540 சதவீதம் வரையான வீச்சளவினால் இலாப வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூரல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |

**(ஆ) வருமானக் குறியீட்டிலக்கம்**
**20:02:04:00 - பங்கிலாப வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 20:02:04:00 - பங்கிலாப வருமானக் குறியீட்டிற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 6,300,000,000 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டு இருந்ததுடன், மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 97 சதவீதம் அல்லது ரூபா 6,087,754,386 ஆன வருமானமொன்று மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூரல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |
| (ii) | 5 பொது முயற்சிகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்ட பங்கிலாப வருமானத்தை விஞ்சி 33 சதவீதம் முதல் 150 சதவீதம் வரையான வீச்சளவில் பங்கிலாப வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூரல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |
| (iii) | 11 பொது முயற்சிகளிலிருந்து பங்கிலாப வருமானமாக மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளவாறான வருமான பெறுவனவுகளின் குறைவு 3 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது. | இந்த நிறுவனங்களில் நிலவும் செயற்படு மூலதன பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளும் நிதியாண்டுகளினுள் குறைந்த இலாபத் தன்மை அல்லது தேறிய நட்டம் அறிக்கையிடல் மற்றும் செயற்படுத்த உத்தேச நிறுவன ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களிற்காக நிதி ஒதுக்க வேண்டி ஏற்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக மதிப்பீட்டு ரீதியான வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூரல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ------------------------- | ------------------- |
| (அ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டினுள் செலவுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் சேமிப்பு காணப்பட்டால் சம்பிரதாயமாக மேற்கொள்வதனை போன்று அவற்றை ஆண்டு முடிவடைய முன்னர் வேறு செலவுகளிற்காக பயன்படுத்தக்கூடாது எனக் குறிப்பிட்டிருந்த போதும், பொது முயற்சிகள் திணைக்களத்தினால் | | |

| | | | |
|---|---|---|---|
| | பின்வரும் செலவின விடயங்களிற்கிடையில் ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன. | | |
| (i) | 4 செலவின விடயங்கற்குரியதாக மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் போதாமை காரணமாக கூட்டுத் தொகை ரூபா 508,152,000 ஆன அளவொன்று அதாவது 0.4 சதவீதம் முதல் 125 சதவீதம் வரை வீச்சளவில் நிதிப்பிரமாணம் 66/69 கீழ் ஏற்பாடுகளை அதிகரித்துக் கொண்டிருந்தது. | பின்வரும் விடயங்கள் காரணமாக உள்ளன.<br><br>• 2022 ஆண்டில் 1205 செலவின விடயத்திற்காக ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டு இருக்காமை.<br><br>• எதிர்பாரா விதமாக செலவுகள் அதிகரித்தமை.<br><br>• எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திற்குரிய ரூபா 25,565,718,757 ஆன மீதியை தீர்ப்பதற்காக 241-1-1-2301(30) செலவின விடயத்திற்கு போதிய ஏற்பாடு இல்லாதமை போன்ற காரணங்களின் மீது நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல் செய்யப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 14 செலவின விடயங்களில் ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாட்டு அளவை தேவையான அளவை விஞ்சி பெற்றுக் கொண்டதன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 508,152,000 அதாவது 0.5 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வீச்சளவில் மீளாய்வாண்டில் ஏற்பாடுகள் குறைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | பின்வரும் விடயங்கள் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.<br><br>• திணைக்ளத்தில் ஊழியர் வெற்றிடம் காணப்படல்.<br><br>• தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 பிரகாரம் செலவுகளை கனிசமான அளவு கட்டுப்படுத்தியமை.<br><br>• தேசிய நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கல்வி சுற்றுலா, பயிற்சிகள் மட்டுப்படுத்தப்படமை | நிதிப்பிரமாணம் பிரகாரம் முடியுமான அளவிற்கு சரியாக மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும். |

- ஒதுக்கிய வாகன உரித்துடைய அலுவலர்களிற்காக வழங்கப்படும் எரிபொருள் அளவு குறைந்தமை.
- புதிய உடன்படிக்கைக்கு உட்படுவதற்கு பதிலாக நிலவுகின்ற உடன்படிக்கையின் குத்தகை வாடகை காலத்தை நீடித்தல்.
- தேசிய சேமிப்பு வங்கியின் டோமன்ட் உரிமையை செலுத்துவதற்கு போதிய கட்டுநிதி இல்லாமை.
- வங்கியினால் வழங்கும் ஆதனக் கடன்களை மட்டுப்படுத்தியமை.

(ஆ) செலவின விடயங்களை பரிசோதிக்கும் போது பின்வரும் இணக்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **செலவின விடயம் மற்றும விபரம்** | **செலவின பேரேட்டின் பிரகாரம் ஆண்டின் செலவு** | **திறைசேரி அச்சின் பிரகாரம் அண்டின் செலவு** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 241-1-1-2301-008 மூலதன பங்களிப்பு – தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை | 12,151,552,659 | 19,290,897,758 | 7,139,345,099 |
| 241-1-1-2301-30 எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் | 25,565,718,757 | 24,543,438,157 | 1,622,280,600 |

தற்போது பேரேட்டில் குறித்த கொடுக்கல் வாங்கல்களை குறித்துள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறன தவறுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

பேரேடுகளை காலரீதயாக திறைசேரி அச்சிடலுடன் இணக்கம் செய்ய வேண்டும்.

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) இல் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்களின் அளவுகளிற்கு மேலதிகமாக ரூபா 361,218 ஆன பொறுப்பக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு மீளாய்வாண்டின் போது உட்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்குரியதாக உட்பட்டுள்ள பொறுப்புக்களை, பொறுப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தல் தவறுதலால் விடுபட்டுள்ளதுடன், இதன் பின்னர் இவ்வாறான தவறுகளை தவிர்த்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்வரும் ஆண்டின் போது தீர்ப்பதற்கு எதிர்பார்த்து உட்பட்டிருந்த பொறுப்புக்களை சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியமை. |
| (ஆ) | நி.பி. 94(1) பிரகாரம் திணைக்களத்தினால் சேவையொன்று அல்லது வழங்கல் ஒன்றிற்காக வருடாந்த மதிப்பீட்டில் அதற்காக நிதியேற்பாட்டை விஞ்சி எவ்வித செலவிற்கோ அலல்து கடப்பாட்டிற்கோ உட்படக்கூடாத போதும், 2 செலவின விடயங்களின் கீழ் சேமிப்பை விஞ்சி ரூபா 253,293 ஆன பொறுப்புக்கள்/கடப்பாடுகளிற்கு உட்பட்டிருந்தது. | இதன் பின்னர் பொறுப்புக்களிற்கு உட்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் 10 ஆம் பந்தி மற்றும் 2018 இன் இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(2) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டிய போதும், அரச பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2022 ஆண்டின் வருடாந்த அறிக்கையை 2023 பெப்ரவரி 28 ஆம் தேதி வரையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2022 ஆண்டிற்குரியதாக செயலாற்றுகை அறிக்கையை தற்போது தயாரித்துக் கொண்டு இருப்பதுடன், அதனை மிக விரைவில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 மே 22 ஆம் திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பத்தி பிரகாரம், இலங்கையிலிருந்து ஆரம்பிக்கும் விமான பிரயாணங்களுக்கு இலங்கைக்கு வெளியில் விநியோகிக்கப்படும் அல்லது விற்கப்படும் ஒவ்வொரு பயணிகள் பிரயாணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டுகள் விற்பனை செய்யப்படும் முறை மற்றும் அல்லது விநியோகத்தினை கவனத்திற் கொள்ளாது ஐ.அ.டொ 60 ஆன மிகை அறவீடொன்றை அல்லது அதற்கு சமமான தொகையை அறவிட வேண்டிய போதும், அந்த வர்த்தமானியின் 8 பத்தியின் பிரகாரம் அவ்வாறு திரட்டப்படும் மிகை அறவீட்டுத் தொகையை சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுவதன் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2008 ஆகஸ்ட் 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் அந்த மிகை அறவீடாக ரூபா 16,982 மில்லியனை சேகரித்திருந்த போதும், அத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக 2017 ஜூன் 12 திகதி சட்ட விவகாரங்கள் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயமான ”இந்த மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிடும் இயலுமை காணப்படுவதாகவும், அந்த மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கும் சட்டப்பூர்வ கடமை உள்ளதாகவும்'' குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதத்துடனும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினை அறிவுறுத்தப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி அளவிலும் இந்த மிகை அறவீட்டுத் தொகையை சிவில் விமானப் போக்குவரத்து | அரசாங்கத்தின் வரி அல்லாத வருமானமாக பொது முயற்சிகளிலிருந்து வருமான வரி மற்றும் இலாபப் பங்கை சேகரிக்கும் கடமைப் பொறுப்பு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், வரி வருமானத்தை சேகரிப்பது தொடர்பாக அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், மேற்படி மிகை அறவீடு திரண்ட நிதியத்திற்கு செலவாகவில்லை என அவதானிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம், அந்த மிகை அறவீட்டை அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்குமாறு திறைசேரி செயலாளரினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிற்கு, 2023.04.26 திகதி அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். | திணைக்களத்தின் முக்கிய பணிகளான வருமானம் சேகரிப்பது தொடர்பாக முறையான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்த வேண்டியமை. |

அதிகார சபையிடமிருந்து அறவிட பொது முயற்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.

## (ஆ) மூலதன பங்களிப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்கு உரிமையுடைய பொது முயற்சிகள் மற்றும் அரச கம்பனிகள் 13 இனால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி இருப்பு உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று அந் நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 985,745 மில்லியன் ஆனதுடன், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 149,875 மில்லியனான காரணத்தால் 2022 திசெம்பர் 31 திகதியன்று அரசாங்கத்தின் திதிக்கூற்றுக்களினுள் மூலதனப் பங்களிப்பு ரூபா 835,870 மில்லியன் குறைவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். குறித்த சீராக்கங்களை 2023 ஆண்டில் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச உரிமையுடைய நிறுவனங்களுடன் காலரீதியாக இருப்பு உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர 31 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அரச நிதிக்கூற்றுக்களிற்கு இடையே 07 நிறுவனங்கள் தொடர்பாக அரசிற்கு சொந்தமான பங்குகளின் எண்ணிக்கையில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2022 திசெம்பர் 31 திகதியன்று அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,877 மில்லியன் குறைவாக அரச நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். தேவையான சீராக்கங்களை 2023 ஆண்டில் மேற்கொள்ள குறித்துக் கொண்டேன். | அரச உரிமையுடைய நிறுவனங்களுடன் காலரீதியாக மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | அரச கம்பனியொன்றில் உரிமை கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பெயரளவு பெறுமானத்தின் பிரகாரம் கணக்காய்வின் போது செய்யப்பட்ட கணக்கிடலில் 2022 திசெம்பர் 31 திகதியன்று பெறுமதி ரூபா 5,141 மில்லியன் ஆன போதும், அது அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,476 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2022 திசெம்பர் 31 | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். இது தொடர்பாக தேவையான சீராக்கங்களை 2023 ஆண்டில் மேற்கொள்ளவதாக அறவிக்கிறேன். | அரச உரிமையுடைய நிறுவனங்களுடன் காலரீதியாக மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியன்று அரசாங்கத்தின் திதிக்கூற்றுக்களில் ரூபா 9,336 மில்லியன் கூடுதலாக மூலதனப் பங்களிப்பு காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | பிராந்திய அபிவிருத்தி வங்கியின் மூலதன நிலைமையை Capital Adequacy (Tier 1) மேம்படுத்திக் கொள்ள அதற்கு முன்னர் லங்காபுத்ர அவிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றிருந்த ரூபா 175 மில்லியனான பொது திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை பதிலீடு செய்து 2022 திசெம்பர் மாதம் 15 திகதியன்று ரூபா 175 மில்லியன் பெறுமதியான 6,183,946 பங்குகளை விநியோகித்திருந்த போதும், அது 2022 திசெம்பர் 31 திகதிக்கு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர 15 திகதி ரூபா 175 மில்லியன் பெறுமதியான 6,183,946 பங்குகள் விநியோகிகப்படடு இருந்த போதும், பங்கு விநியோகச் சான்றிதழ் பொதுச் திறைசேரிக்கு கிடைத்து இருக்காததால் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்காததுடன், அது கிடைத்தவுடன் கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | அரச உரிமையுடைய நிறுவனங்களுடன் காலரீதியாக மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசுடமை வியாபாரங்களில் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 1,405,204 மில்லியனாக இருந்ததுடன் அவற்றில் ரூபா 109,625 மில்லியன் அதாவது 8 சதவீதம் ஒவ்வொறு நிறுவனங்களிலும் மீண்டெழும் தன்மையிலான அதாவது கடன்கள் மற்றும் கடன் வட்டி செலுத்துதல் மற்றும் சம்பளம் மற்றும் ஊதியங்களை செலுத்துவதற்காக பொது திறைசேரயினால் விடுவிக்கப்பட்ட தொகைகளுடன் கூடியதாகும். | பொது திறைசேரி, இவ் அனைத்து நிறுவனங்களினதும் தனி உரிமையாளர் ஆகும். அதன் பிரகாரம், அந்த நிறுவனங்களில் காணப்படும் செயல்பாட்டு மூலதனத் தன்மையிலான செலவினங்களுக்காக பொது திறைசேரியினால் பங்களிப்பு செய்தல் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மூலதனப் பங்களிப்பாகக் கருத முடியுமென் தெரிவித்துக் கொள்கிறேன். | மீண்டெழும் தன்மையிலான செலவுகளை செய்வதன் ஊடாக நிறுவனங்களின் மூலதன பங்களிப்புகளில் அதிகரிப்பு இடம் பெறாததால் ஒழுங்கான வழிமுறையொன்னை அதற்காக பின்பற்ற வேண்டும். |
| (vi) | அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டினுள் அரசுடமை வியாபாரங்களில் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 1,405,204 மில்லியனாதுடன் இவற்றில ரூபா 1,246,401 மில்லியன் அதாவது 89 சதவீதம் 2023 பெப்ரவரி 07 திகதிய அமப23/0154/604/014 கொண்ட அமைச்சரவை முடிவுகளின் கீழ் அரசுடமை முயற்சிகளின் இனங்காணப்பட்ட பொறுப்புக்களை இலங்கை அரசின் ஐந்தொகைக்கு சாட்டுதலின் கீழ் செம்மையாக்கப்ட்ட பெறுமானங்கள் ஆகையால் ஏற்பட்ட தாக்கமாகும் என அவதானிக்கப்ட்டது. விபரங்கள் பின்வருமாறு. | கணக்காய்வு ஐயவினாவுடன் உடன்படுகிறேன். அரசுடமை முயற்சிகளின் இனங்காணப்பட்ட பொறுப்புக்களை இலங்கை அரசின் ஐந்தொகைக்கு சாட்டுதல் எனும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் MF/PE/001/CM/2023/005 மற்றும் 2023.01.20 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு அரசின் ஐந்தொகைக்கு சாட்டுதல் செய்யப்பட்டது. | அரசுடமை முயற்சிகளின் இனங்காணப்பட பொறுப்புக்களை அரசிற்கு சுவீகரித்ததன் காரணமாக அரச நிதி நெருக்கடிற்கு தாக்கம் செலுத்த முடியுமாகையால் அப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு உரிய முறைமையொன்னை தாபிக்க வேண்டியமை. |

| இலக்கம் | நிறுவனம் | அரசுடமை முயற்சிகளின் இனங்காணப்பட்ட பொறுப்புக்களின் கீழ் அரசின் ஐந்தொகைக்கு செம்மையாக்கப்பட்ட பெறுமானங்கள் |
|---|---|---|
| | | ரூபா |
| 1 | இலங்கை மின்சார சபை | 362,307,620,369 |
| 2 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 884,093,386,477 |
| | மொத்தம் | 1,246,401,006,846 |

(இ) “மக்களின் அபிலாஷைகளை பாதுகாத்தல்” எனும் பிரதான பணியின் கீழ் பொது முயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்படும் நிறுவனங்களில் ஆண்டறிக்கைகள் உரிய திகதிகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகளை செய்வது திணைக்களத்தின் கடமையாகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) திணைக்களத்தின் கண்காணிப்பிற்கு உட்படும் 305 நிறுவனங்கள் காணப்பட்ட போதும், 52 பொது முயற்சிகளிற்கு உரியதான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்கள் மாத்திரமே கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்தன. அதன் பிரகாரம், 248 நிறுவனங்களின் அதாவது 83 சதவீதத்திற்கு உரியதான அத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 305 நிறுவனங்களிகிடையில் வணிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் கூட்டுத்தாபனங்கள், நியதி சட்ட சபைகள், அரசுடமை கம்பனிகள் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதாக இனங்கண்டுள்ளதுடன், நிறுவனங்களிற்கிடையில் மூலஉபாயமாக ரீதியாக முக்கிய 52 நிறுவனங்கள் நேரடியாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக மேற்பார்வை செய்யப்படுகின்றன. செயலற்ற அரச வியாபாரங்களின் ஆண்டறிக்கை தயாரித்தல் இடம்பெறாததுடன் பிரதேச தோட்டங்கள் தனியார் பிரிவுகளிற்கு சொந்தமான தாகையால் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையில்லை. எவ்வாறாயினும் | கண்கானிப்பிற்கு உள்ளாகும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் தகவல்கள் பின்னூட்டல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் தேவையான வழிகாட்டல்கள் இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.<br><br>சிறிய பங்குரிமை கம்பனிகள், துணை கம்பனிகள், இணைக்கப்பட்ட துணை கம்பனிகள் மற்றும் சார்ந்த கம்பனிகளின் ஆண்டறிக்கை நேரடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் தாய் கம்பனி ஊடாக கூட்டிணைந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. | |
| (ii) | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், அந்த 52 பொது முயற்சிகளில் 23 பொது முயற்ச்சிகள் மாத்திரமே 2021 ஆண்டுக்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக சமர்ப்பித்திருந்தன. எவ்வாறாயினும் அந்த 23 பொது முயற்ச்சிகளிற்கிடையில் 17 ஆண்டறிக்கைகள் மாத்திரமே பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில் கணக்காய்வு திகதியான 2023 மே 24 திகதியளவில் குறிப்பிடப்பட்டிருந்தன. | குறித்துக் கொண்டேன். | கண்காணிப்பிற்கு உள்ளாகும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் தகவல்கள் பின்னூட்டல் செய்யப்பட வேண்டும் |
| (iii) | 2022 ஆண்டிற்காக அந்த 52 பொது முயற்சிகளின் பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கணக்காய்வு திகதியளவில் 5 பொது முயற்சிகள் மாத்திரமே ஆண்டறிக்கையை சமர்ப்பித்திருந்தன. | குறித்துக் கொண்டேன். | கண்காணிப்பிற்கு உள்ளாகும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் தகவல்கள் பின்னூட்டல் செய்யப்பட வேண்டும் |
| (iv) | 2021 ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட அரசுடமை முயற்சிகளுக்கான நிறுவனக் கட்டுப்பாடு மீதான வழிகாட்டி கேவையின் 3.2 அத்தியாயத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டுக் கூட்டத்திற்கு ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டின் போதும் அது தொடர்பாக பொது | பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக இந்த அனைத்து நிறுவனங்களிற்கும் உரிய வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு, நிறுவன தலைவர்களுக்கு மற்றும் திறைசேரி பிரதிநிதிகளுக்கு தமது கண்காணிப்பின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் ஆண்டறிக்கையை உரிய | நிறுவன ரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| முயற்ச்சிகள் திணைக்களத்தின் தலையீடும் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | தினத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>திறைசேரியின் பிரதிநிதிகள் வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பது தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சி திட்டமொன்றை 2022.11.24 ஆம் திகதி நிதி அமைச்சில் நடாத்தப்பட்டது. கூடுதலான பொது முயற்சிகள் அளவொன்று காணப்படும் முவ்வமைச்சுக்களான கைத்தொழில் அமைச்சில் 2022.09.27 திகதியும் கல்வி அமைச்சில் 2023.05.22 திகதியும் மற்றும் சுகாதார அமைச்சில் 2023.01.25 திகதியும் அறிவூட்டும் நிகழ்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டன.<br><br>இந்த பொது முயற்சிகள் சட்ட விதி பிரமானங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்குவது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு போன்றே வரிசை அமைச்சிற்கும் கண்காணிக்கும் பொறுப்பொன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் பொது முயற்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது விரிவாக்கப்பட்டுள்ளன. | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1 இணைக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டு திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்தில் நிலவிய 07 வெற்றிடங்களினுள் 03 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்கள் நிலவியதுடன், இரண்டாம் மட்ட அலுவலர்களின் அபிவிருத்தி | 2022.12.31 திகதியன்று திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்தில் நிலவிய 03 வெற்றிடங்களில் தற்போது 02 வெற்றிடங்கள் வரை குறைந்துள்ளதுடன், குறித்த 02 | தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| | உத்யோகத்தர் சேவையின் 03 மிகை மற்றும் முகாமைத்தவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 4 வெற்றிடங்களும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக உரிய இரண்டு அலுவலர்களை இணைத்துக் கொள்வதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவித்து அனுப்புவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகர் சேவையின் மிகை உத்தியோகத்தர் மூவரில் ஒரு உத்தியோகத்தர் வேரொரு திணைக்களத்திற்கு இடம்மாறி சென்றதுடன் எஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்களின் பதவிகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மிகை காணப்படவதில்லை. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 04 வெற்றிடங்களும் தற்போது பூர்த்தி ஆகியுள்ளன. | மற்றும் தேவையற்ற பதவியணியினர் அங்கீகரிக்கப்ட்ட பதவியணியினரினுள் காணப்படின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை திருத்தப்பட வேண்டிமை. |
| (ஆ) | கைத்தொழில் அமைச்சினூடாக சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும் ஒரு அலுவலர் 2011 சனவரி 01 முதல் 12 ஆண்டுகளாக பொது முயற்சிகள் திணைக்களத்தில் பணியாற்றுவதாக அவதானிக்கப்ட்டது. | குறித்த அலுவலர் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் பணியாற்றியதுடன் அந்த நிறுவனம் மூடப்பட்டதன் பின்னர் அமைச்சரவை தீர்மானமொன்றின் ஊடாக இந்த திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளார். குறித்த அலுவலரின் கோரிக்கை மீது மற்றும் கைத்தொழில் அமைச்சின் உடன்பாட்டின் மீது முறையான அங்கீகாரத்தின் பின்னர் இந்த அலுவலர் இவ்வமைச்சில் பணியாற்றுகிறார். | குறித்த அலுவலரின் பணியை பெற்றுக்கொள்வதனை முறையாக்க வேண்டிமை. |